# வாக்கியம் அமைத்தல்

## த வரிசை சொற்கள்

1. தெரு

எங்கள் தெரு விளக்கு எரியவில்லை.

2. துன்பம்

துன்பத்தை தைரியமாக எதிர்கொள்ள வேண்டும்.

3. துறைமுகம்

கப்பல் துறைமுகத்திற்கு வந்தது.

4. தூண்டில்

முருகன் தூண்டில் கொண்டு மீன் பிடித்தான்.

5. திசை

சூரியன் உதிக்கும் திசை கிழக்கு.

6. தீபம்

வனிதா தீபம் ஏற்றினாள்.

Notebook Writer
Notebook Writer
Notebook Writer

7. தீப்பெட்டி

குழந்தைகள் தீப்பெட்டியை எடுக்கக்கூடாது.

8. தெற்கு

இந்தியாவின் தெற்கு திசையில் தமிழ்நாடு அமைந்துள்ளது.

9. தும்பிக்கை

யானையின் தும்பிக்கை வலிமையானது.

10. தைரியம்

இராமன் தைரியமான வீரன்.

11. தேங்காய்

செல்வம் கோவிலில் தேங்காய் உடைந்தான்.

12. தேர்வு

நர்மதா தேர்வில் முதல் மதிப்பெண் பெற்றாள்.

Notebook writer

13. தேர்

மக்கள் அனைவரும் தேர் இழுத்தனர்.

14. தேள்

தேள் மிகவும் ஆபத்தானது.

15. தோகை

மயில் தோகையை விரித்து ஆடியது.

16. தேன்

கரடிக்கு மிகவும் பிடித்த உணவு தேன்.

17. திருவிழா

கோவில் திருவிழா சிறப்பாக நடைப்பெற்றது.

18. தோட்டம்

தோட்டத்தில் தேங்காய் காய்த்தது.

Notebook writer

19. தீவு

விடுமுறைக்கு அந்தமான் தீவுக்கு சென்றோம்.

20. தொட்டில்

குழந்தை தொட்டிலில் உறங்கியது.